உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௮	திருவள்ளுவர் யாண்டு கக௮௩ நந்தன—ஐப்பசி 1952—அக்டோபர்	மலர் எ

திருக்குறள் சொல்லடைவு.

திருக்குறள் பெருஞ் செல்வத்தின் பெருமையையும் அன்பர் தமிழ்மணி திருவாளர் சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள் மாட்சியையும் தமிழுலகம் நன்கு அறியும். திருக்குறட் பெருநூல், ஆசிரியர் தோற்றுவித்த நாள் முதல், நாளும் நாளும் சிறப்பு மிகுந்து வளர்ந்துவருகிறது. திருக்குறள் கருவூலத்திலிருந்து தாம் வேணமட்டும் அள்ளிக்கொள்ளாத புலவரும் அறிஞரும் இல்லை எனலாம். ஈடும் எடுப்பும் இல்லாத நம் திருக்குறள் மாட்சியை நன்குணர்ந்து தொண்டு பூண்டு பேறுற்ற திருவாளர் T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் "யான் பெற்ற இன்பம் இவ் வையம் பெறுக" என்றுகொண்ட திண்மையான கொள்கையினாலே இவ் வரிய நூல் பகுதியாகவோ முழுதுமாகவோ பள்ளிச் சிறார் கையிலும் ஏறி அவர்க்கு ஊக்கமும் உணர்ச்சியும் அறிவும் அளிப்பதாயிருக்கின்றது.

நமது அன்பர் திருவாளர் வேலாயுதம் பிள்ளையவர்கள் பேரறிவு பெற்ற பெருந்தகையாளராய்த் தாம் பெற்ற அறிவை ஒழுங்கு பெறப் பயன் பெறுத்தி ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு நேரான தனித்தமிழ் கலைச்சொற்கள் ஆக்கியருளினார்கள். பெரும் பகுதி நம் தமிழ்ப் பொழிலில் வெளிவருவதாயிற்று. நம் தமிழ்த் தாயின் தனிப்பெருமையை உலகறியும் பொருட்டு நம் கரந்தைத்

தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் மொழியரசி எனும் சீரிய நூலைத் தொகுத்துத் திருவாரூர்த் திருப்பதியில் அரங்கேற்றி உலகுக்கு உதவிப் புகழ் பெற்றுர்கள். அவர்கள் பெருந்தொண்டு பின்னும் பல. அவர்களது பல்லாண்டு முயற்சியின் பயனுகவும் உழைப்பின் விளைவாகவும் திருக்குறள் 'சொல்லடைவு' என்னும் அரிய பெரிய நூல் தோன்றுவதாயிற்று.

இந்தச் சிறந்த நூல் தமிழ்ப் பேரன்பர்கள் விருப்பப்படி 1952, செப்டெம்பர், 28-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல், சென்னைச் சிறுகுன்றுப் பெருவழியிலுள்ள இராசாசி மன்றத்தில், சென்னைப் பொருள்நெறி யமைச்சர் திருவாளர் C. சுப்பிரமணியம் அவர்கள் சீரிய தலைமையில் பெருந்திரளாகக் குழுமியிருந்த அறிஞர்கள் முன்னிலையில் சிறப்பாக அரங்கேறுவதாயிற்று. பழந்தமிழ்த் தொண்டர் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், வரவேற்றுர்கள். திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் திருக்குறள் சிறப்புப் பொருளாக முன்னுரை கூறி ஆசிரியர் பெருமையை எடுத்துரைத்து அவையோர்க்கு அறிமுகப் படுத்தித் தாம் இடைநேர்ந்த பிற இன்றியமையாத அலுவலின் பொருட்டுச் செல்ல நேர்ந்தமையின் தம் இடத்தில் திருவாளர் டாக்டர் T. S. திருமூர்த்தி அவர்களை இருத்திச் சென்றுர்கள். ஆசிரியர் திருவாளர் வேலாயுதம் பிள்ளையவர்கள் தம் பணித்திறன் முதலியவற்றை அழகுபெற எடுத்துரைத்து யாவரும் மெச்ச நூலை அரங்கேற்றினுர்கள்.

(ஆசிரியர் சொற்பொழிவுச் சுருக்கத்தைப் பிறிதோரிடத்திற் காண்க)

செந்தமிழ்த் தொண்டிலும் சமயத் தொண்டிலும் திளைத்து மகிழும் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் உள்ளன்பின் மிகுதியால் தழுதழுத்த மொழிகளில் ஆசிரியரையும், அரங்கேறு நூலையும், அவையோரையும், உலகையும், சிறப்பாகத் தமிழுலகையும் மனமாற வாழ்த்திப் பொன்னுரை அருளினுர்கள்.

இத்துணையும் கண்டு களித்த அறிஞருள் திருவாளர்கள் R. P. சேதுப்பிள்ளை யவர்கள், T. P. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள், ஜனுப் Dr. மகம்மது உசேன் நயினுர் அவர்கள்,

ஹெர்பர்ட் சுந்தரனார் அவர்கள் பாராட்டுரை பகர்ந்து மகிழ்ந்தார்கள். திரு. T. K. சண்முகம் பிறப்பாளர் அவர்கள் பண்டை மரபு விளங்க அரங்கேறு புலவர்க்குப் பொன்னுடை போர்த்துப் பூமாலை சூட்டிப் புகழ்ந்தார்.

கடவுள் வணக்கங் கூறிய திருமிகு S. பார்வதியம்மையார் அவர்கள், திருக்குறள் இன்னிசை வழங்கத், திருவாளர் பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் யாவர்க்கும் நன்றி கூற, அரங்கேற்று விழா மிகச் சிறப்பாக நிறைவேறியது.

இனி, நன்றிக்கடன் பூண்ட தமிழர்களது ஒரு திருப்பணியாவது நம் பெருமையைக் காக்கவேண்டித் தொழிலாற்றிவரும் திருவாளர் சாமி. வேலாயுதம்பிள்ளையவர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் நற்பணி நாளும் நாளும் சிறந்தோங்கி வளரவும் அவர்கள் இயற்றிய திருக்குறள் சொல்லடைவு முதலிய நன்னூல்கள் எங்கும் பரவவும் உறுதுணையாய் உதவுவது ஆகும்.

திருக்குறள் சொல்லடைவு அரங்கேற்று விழாவில் திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை அவர்கள் ஆற்றிய அரங்கேற்று உரைச் சுருக்கமாவது :

"தமிழ் மக்களைப் பலர் குறை கூறுகின்றனர்; ஆனால் நான் அவர்களை ஏத்திப் போற்றுகின்றேன்; என் தகுதிக்குமேல் அவர்கள் சிறப்புச் செய்து வருவதற்கு எனது உளங்குளிர் நன்றி கூறுகின்றேன். இப்பொழுது உயர்திரு. டி. கே. சண்முகம் அவர்கள் செய்த பெருஞ் சிறப்பானது தமிழ் அன்னையே, ஔவையாரே, நேரில் வந்து இங்குள்ள ஒவ்வொருவருக்கும், தமிழ் மக்கள் அனைவருக்கும் செய்த சிறப்பாகக் கருதி அவர்களை வாழ்த்துகின்றேன்" (எனத் தழுதழுத்த குரலிற் கூறிப் பின்) "சொல்லடைவு எனுங் கலை இத்தாலிய நாட்டில் 1231இல் தங்கள் இலத்தீன் பைபிளின் பொருள் விளங்கச் செய்ய எழுந்தது. 1535இல் ஆங்கிலப் பைபிளுக்காக வெளியிடப்பட்டது; பின்னர் சேக்ஸ்பியர் முதலிய ஆங்கிலப் புலவர் நூல்களுக்குச் செய்யப்பட்டது. இவற்றிற்கு ஏற்ப ஜி. யு. போப் அவர்கள் 1886 இல் திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் இயற்றினர். அதனை நான் தமிழ்ப்படுத்தி விரித்து வெளியிட வந்த காரணம் வேறாகும்.

தமிழ்க் கலைச்சொல்லாக்க வேலை செய்த பொழுது திருக்குறள் அரசியல் நூலுக்குப் (Politics) பல சொற்களை உதவியதன்றி ஊன்றிப் பார்க்கையில் கணக்கியல் முதலிய பல அறிவுத் துறைகளுக்கும் வழங்கலாயிற்று; இன்னும் ஊன்றிப் பார்க்க அதில் இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், நான் மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலிய பற்பல நூல்களின் சுருக்கங்க ளிருப்பதையும், அவர் கூறும் தலையாயவை, கடையாயவை, பெரியவை முதலியவற்றையும் கண்டு வியந்து அவற்றையெல்லாம் வேறுபிரிக்கப் புகுந்தபொழுது ஒவ்வொரு சொல் வருமிடத்தாகும் வீண் வேலைக்கு ஆற்ருது இவ் வாராய்ச்சிகளை யெல்லாம் அப்படியே நிறுத்தி விட்டு இந் நூலை இயற்றப் புகுந்தேன். ஒருவாறு முடித்ததும் பரிமேலழகரின் அரிய இலக்கணக் குறிப்புகள் பொருள் விளக்கஞ் செய்யு முறையைக் கண்டு வியந்து அவற்றை யெல்லாம் விரிவு படுத்தி முழுமையாகப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு சொல்லும் இருமுகம், மும்முகம், நான்முகம், ஐம்முகம், ஆறுமுகம் உடைய தெய்வங்கள் போன்று இனிது விளங்கி மகிழ் வூட்டுவதாயின. இதனைச் சில தமிழறிஞர்களுக்குக் காண்பித்த பொழுது அவர்கள் முக மலர்ச்சியே பெரு ஊதியமாய் விளங்கிற்று. யான் பெற்ற இன்பம் பெருக இவ் வையகம் என வெளியிடலானேன். வேறு ஒரு பதிப்பாளரும் ஏற்கா விடினும் தமிழ் மக்க ளுள்ளத்துள்ள தனி நம்பிக்கையில் பெரும் பொருட் செலவில் வெளியிடலானேன். பின்னர், முன் விட்டு வைத்த ஆராய்ச்சியைத் தொடங்கவே பொருளடைவு மிகச் சிறப்பாக வெளிவந்தது. அதனைச் சுருக்கித் தஞ்சையில் 16 சொற் பொழிவு பேராதரவுடன் நிகழ்த்தியதும் இங்கு இப் பணியை முற்றுவிக்க வந்தேன். அச்சான நூலைப் பார்த்த அருந் தமிழ்த் தலைவர்கள் சிறப்பாக அரங்கேற்றுவிக்கத் தாமே முன் வந்தனர். அதன் பயனை இங்குக் காண்கின்ருேம். இனி, பொருளடைவை முடிக்க உங்கள் பேராதரவை நாடுகின்றேன். இவ் வூரில் தக்க தமிழ் நூல் நிலையம் இல்லாததால் தமிழாராய்ச்சி தடைப்படுவதை நீக்கி யருள உங்கள் யாவரையும் கேட்டுக் கொள்கிறேன்." என்று கூறினுர்.

பின், நூலரங்கேற்றுந் தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளை வரலாறு வாயிலாக விளக்கி இந்நூலைச் சுருக்கமாக அரங்கேற்ற முதல், இடை, கடைப் பகுதிகளைச் சிறிது படித்துக் காட்டி ஏற்குமாறு வேண்டிப், பின் அணிந்துரையை வாசித்துத் வீரத் திரு. பி. டி. இராசன் அவர்கள் மகனுரிடம் அளித்து யாவர்க்கும் நன்றி கூறி அரங்கேற்றுவித்தார்.

தாகந் தீர்த்த செழியன்.

(வித்துவான் திரு. அடிகளாசிரியர்.)

தாகந் தீர்த்த செழியனைப் பற்றிய வரலாற்றினை விளக்கமாய் அறிந்துகொள்வதற் கேற்ற சான்றுகள் கிடைக்காமையால் அவனைப் பற்றி வரலா றெழுதிய பெரும் புலவ ரெல்லாம் பிழைபடவே எழுதியுள்ளனர். என்னிடம் அச் செழியனைப் பற்றியும் அவனுடைய முன்னோரைப் பற்றியும் பாடப்பெற்ற நூல்கள் இருத்தலினாலும், அச் செழியதரையன் வாழ்ந்து வந்த சேல நகருக்கு அணித்தாக என்னுடைய ஊர் இருத்தலினாலும் ஒருவாறு அவனுடைய வரலாற்றினை அறிந்து விளக்கி எழுதுகின்றேன்.

பதினேழாம் நூற்றாண்டிலே வாழ்ந்து வந்த அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பவர் தமக்குக் குதிரை வேண்டுமென்று தாகந் தீர்த்த செழியதரையனுக்குச் சீட்டுக்கவி எழுதியனுப்பியதாகத் தமிழ் நாவலர் சரிதை என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

ஏடா யிரங்கோடி யெழுதாது தன்மனத்
    தெழுதிப் படித்த விரகன்
எதுசொலினு மதுவே யெனச்சொ லுங் கவிவீர
    ராகவன் விடுக்கு மோலை
சேடா திபன்சிர மசைக்குங் கலாகரன்
    திரிபதகை குலசே கரன்
தென்பாலை சேலம் புரந்து தாகந்தீர்த்த
    செழிய னெதிர்கொண்டு காண்க
பாடாத கந்தருவ மெறியாத கந்துகம்
    பத்திகோ ணாத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணாத கோடைவெம்
    படைவாய்த் தொடாத குர்தம்

சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
திக்கவர விடலே னுமே.

—தமிழ் நாவலர் சரிதை, 251.

இப் பாட்டில் செழியதரையனுடைய ஊர் தென்பாலையும் சேலமும் என்று குறிக்கப்பெற் றுள்ளது. இச் சேலம் என்பது சேலம் ஜில்லாவின் தலைநக ராகிய சேலம் என்று மகாவித்துவான் மு. இராகவையங்கார் அவர்கள் கலைமகள், நந்தன ஆனி இதழில் எழுதியுள்ளார்கள். பதினேழாம் நூற்ருண்டுப் புலவர் வரலா றெழுதிய ச. சோமசுந்தர தேசிக ரவர்கள் சேலம் ஜில்லாவிலே திரிபதகை யென்ற ஊரிலேசெழியதரையன் வாழ்ந்ததாய் எழுதியுள்ளார். ஆனல், அச் சேல மென்பதோ திரிபதகை என்பதோ செழியதரைய னுடைய ஊரல்ல. தென்னுர்க்காடு ஜில்லா கள்ளக்குறிச்சித் தாலுக்காவில் உள்ள சின்னசேலம் என்கின்ற சேலமே அவனுடைய ஊராகும். தென்பாலை என்பது சின்ன சேலத்திற்கும் தெற்கே ஏறக்குறைய பதினைந்து கல் தொலைவில் உள்ளதும் திருச்சி ஜில்லா பெரம்பலூர்த் தாலுக்காவில் உள்ளதும் ஆகிய பாலையூரே யாகும். இந்த இரண்டு ஊர்களே யன்றி 'உலகை' என்றும் உலக நத்தம என்றும் உலகங்காத்தான் என்றும் வழங்கப் பெறும் ஊரும் இச் செழியனுக் குரிய ஊரா யிருந்தது. இது சின்னசேலத்தின் வடக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது. செழியதரையனின் முன்னேர் வாழ்ந்த விடம் பாலையூர் என்ப.

செழியன் என்னும் பெயர்க் காரணம்.

தாகந் தீர்த்த செழியனுடைய முன்னேர்களில் ஒருவர் பாண்டிய மன்னரின் கீழ்ச் சிற்றரசராய் வாழ்ந்து வந்தபடியால் செழிய ரென்னும் பட்டத்தைப் பெற்றிருக்கலா மென்று கருதப் படுகின்றது. ஆனல், இச் செழிய பரம்பரையார்கள் காலத் திற்குத் தக்கபடி எந்த எந்தப் பேரரசர்கள் வலுப் பெற்றிருந் தார்களோ அந்த அந்த அரசரின் கீழ்ச் சிற்றரசராய் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களிற் சிலர் 'களப்பாளர்' என்னும் பெய ருடனும்வாழ்ந்து வந்துள்ளனர்.

முன்னோர்கள்.

தாகந் தீர்த்த செழியனின் முன்னோர்களாய் அறியப்படுபவர், 1. அருண்மாலையிட்டான், 2. அனபய மன்னன், 3. நல்லநாயகன், 4. ராயப்பிரான், 5.நவகண்டங் கொண்ட உடையார் களப்பாளன், 6. நாகண்ணய்யன், 7. வேங்கடவன், 8, பிரம்மேசன், 9. களப்பாளன், 10. சிற்ருஞ் செழியன், 11, திருவேங்கடேசன் என்பவர்க ளாவர்,

இவ்வரலாற்றை

விழியருட் பொழிவென்று மாலையிட் டானும்
வியக்கு மனபய மன்னனும்

வில்வவே ணிக்கடிமை நல்லநா யகனுநூல்
விஞய ராயப் பிரானும்

ஒழிவறத் திறைகொண்டு நவகண்ட முங்கொண்ட
வுடையான் களப்பாளனும்

ஓங்குநா கண்ணயனும் வேங்கடவ னும்பதுமை
யுரமேய பிரமேசனும்

பழிகழுவு பொற்குலத் திலதமொத் துளகளப்
பாளனும் வாளகிரியின்

பற்றுடைய சிற்ருனு வெற்றியந் திருவேங்க
டேசனு மெனப்படி தொழும்

செழியர்தம் வழிமுதற் பெரியோர் வழிக்குரிசில்
சிறுதே ருருட்டி யருளே

செழியதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி
சிறுதே ருருட்டி யருளே

என்னுந் தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ்ச் சிறுதேர்ப் பருவம் எட்டாஞ் செய்யுளால் நன்கு உணர லாகும்.

இவர்களில் இறுதியில் குறிப்பிட்ட சிற்றூஞ் செழியனையும் திருவேங்கடவச் செழியனையும் முறையே அண்ணனாகவும் தமபி யாகவும் கருதுதற்கு இடம் உண்டு. இவர்களுள் திருவேங்கடச் செழியனுடைய மகன் இருணீக்குஞ் செழியனுக்கு மூன்று மக்கள் தோன்றினர். அவர்கள் துயரந் தீர்த்த செழியன், தேவேந்திர தாகந்தீர்த்த செழியன், அந்தாலந் தீர்த்த செழியன் என்னும் பெயரினர்.

இவ் வந்தாலந் தீர்த்த செழியனை அந்த காலந் தீர்த்தவன், அந்தாலன் என்றும் வழங்குவர். சின்ன சேலம் பக்கத்தி லுள்ள மக்கள் இன்றும் அந்தாலி உடையார் என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர்.

இந்த அந்தாலந் தீர்த்த செழியனுக்கு ஐந்து மக்கள் தோன்றினர். இவர்கள், முறையே, தாகந் தீர்த்த செழியன், திரு வேங்கடச் செழியன், இருணீக்கிய செழியன், சட்டைநாதச் செழியன், தீர்த்தச் செழியன் என்னும் பெயர் படைத்தவ ராவர். இச் செய்திகளை யெல்லாம் அந்தாலச் செழியன் மஞ்சரியிலும் தாகந் தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ் வாழ்த்துச் செய்யுளிலும் அறிந்து கொள்ளக்கூடும்.

....சந்ததமும்

மற்றூரு மொவ்வாத வள்ளலிரு பத்திரண்டாஞ்
சிற்றூஞ் செழியனெனுஞ் செல்வனுக்குந்—துற்றபுகழ்க்

காரணைய செங்கைத் திருவேங் கடவனுக்கும்
பேரனென வந்த பிரபுராயன்—பார்மன்னர்

மூவரும் வள்ளலொரு மூவெழுவ ரும்முதலாம்
யாவருங் காவ லிகழ்ந்ததற்பின்—பாவலரும்

முத்தமிழும் பல்கலையும் மொய்கலியின் மூழ்காமல்
ஒத்த பெருவாழ் வுதவினோன்—தத்தம்

தடமரபின் முற்பிறந்தார் தாங்குகிளை தாங்க
வடமரம தென்றியம்ப வந்தோன்—அடலுடைய

நிலம்விளங்கத் தோன்றுமிரு ணீக்குஞ் செழியன்
குலம்விளங்கத் தோன்றுங் குமரன்—கலுழிப்

பொருகண்ண மால்யானைப் பூலோக நாதன்
மருக னெனச்சிறந்த மன்னன்—இருநிலத்து

முன்னந் தனது முதல்வர் செயுந்தொழிலைப்
பின்னும் பெருகப் பெருக்கினோன்—ஒன்னலரைக்

கைகொண்ட வேலாற் களைந்து தமிழ்வரைப்
பெய்கொண்ட லேய்க்கும் பெருமாள்—மொய்கலனும்

வாளுங் கவசமு மன்னுயிருந் தன்னிரண்டு
தோளின் துணையும் துணைவிழியும்—நாளுமிகச்

சேந்தபிரா னெந்துயரந் தீர்த்தா னெனுநாமம்
வாய்ந்தபிரான் சூரப்ப வாணனும்—தேர்ந்துகவி

நாவேந் திரவர்க்கும் நல்கும் நரலோகத்
தேவேந் திரதாகந் தீர்த்தானும்—பூவேள்

அமைய வளர்ந்த அருந்தருமங் கீர்த்தித்
தமைய ரெனவுதித்த தக்கோன்.

—அந்தாலச் செழியன் மஞ்சரி

தார்வாழி யுலகுய்ய வந்தகா லக்கொண்டல்
அந்தகா லந்தீர்த்தவன்

தந்ததா கந்தீர்த்த செழியனு மிவற்குயிர்த்
தம்பிதிரு வேங்கடவனும்

ஏர்வாழி மற்றிவற் கிளவலா மிருணீக்கு
மெம்பிரான் வாழியிவனுக்

கினியவனு சன்சட்டை யான்வாழி யிங்கிவற்
கிளையதீர்த் தவனும்வாழி

சீர்வாழி யைவர்க்கு முற்றதுணை யாந்திருப்
பொன்பரப் பியநாதனும்

தினவாழி சேலந் திருப்பாலை யுலகைச்
செழித்துநன் ருகவாழி

பார்வாழி பததாசர் அடுபகட் டாதியன
படைகண்ட சேவகனெனப்

பாரரசர் பாடுமிவ் விருதொடுந் தமரொடும்
பதுமநா ளொடும் வாழியே

—தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ்க் கடைசி வாழ்த்து.

நம் தாகந்தீர்த்த செழியன் மேற் குறிக்கப்பட்ட அந்தாலந் தீர்த்த செழியனுக்கு முதற்பிள்ளையாகப் பிறந்தா னென்று மேற் குறிக்கப்பட்ட அவன் பிள்ளைத்தமிழ்ச் செய்யுளும் இரண்டாம் மகனுய்ப் பிறந்தா னென்று அந்தாலச் செழியன் மஞ்சரியுங் கூறுகின்றன.

குலம்.

இச் செழியதரையர்களுடைய குலம் கங்கா குலமென்னும் வேளாளர் குல மாகும். இச் செழியதரையருட் சிலர் வேளாள ருக்குரிய 'களப்பாளர்' என்னும் பட்டத்தைப் பெறுவதாலும், அந்தகக் கவி வீரராகவர் தாம் பாடிய செழியதரையனைத் திரி பதகை (கங்கை) குலசேகரன் என்று கூறுவதாலும், மஞ்சரியுள் மேழிக் கொடி கூறப்பெற்றிருத்தலாலும் அது துணியப்படு கின்றது,

பெயர்.

அந்தாலந் தீர்த்த செழியனுடைய அண்ணனுக்குத் தேவேந்திர தாகந் தீர்த்த செழியன் என்று பெயர் இருக்கின்றது; மூத்த மகனுக்குத் தாகந் தீர்த்த செழியன் என்று பெய ரிருக் கின்றது; 'தாகந் தீர்த்த' என்னும் பெயர்க் காரணத்தை இப் பொழுது சின்ன சேலத்தில் செழியதரையர் பரம்பரையினரா யுள்ள கங்காதர நயினு ரவர்களைக் கேட்டபோது, "வெகுநாள் பிள்ளையில்லாமலிருந்து பல நோன்புகளெல்லாம் நோற்றுப் பிறந்தபடியால் புத்திர தாகத்தைத் தீர்த்தவ னென்னும் கருத் தில் தாகந் தீர்த்த செழியன் என்று பெயர் வைக்கப்பட்டது." என்று கூறினர். அவர் கூற்று உண்மையாயின் அந்தாலந் தீர்த்த செழியனுடைய மூத்த மக னுகிய தாகந் தீர்த்த செழியனுக்கே மேற் கூறிய வரலாறு பொருந்தும். தேவேந்திர தாகந் தீர்த்த செழியனுடைய பெயர்க் காரணத்திற்கு அவ் வரலாறு பொருந் தாது. சின்ன சேலத்திற்கு அண்மையில் 'தாகந்தீர்த்தான் புரம்' என்று ஒரூரிருக்கிறது. தாகந் தீர்த்த செழியனுடைய தாய் கருவுற் றிருந்த காலத்தில் கல்லடியாபுரம் என்னும் பழம் பேருடைய அவ் வூரிலே பிள்ளைப் பேற்றிற்காகத் தங்கி வாழ்ந்து சிறந்த பிள்ளை யாகிய தாகந் தீர்த்த செழியனைப் பெற்றதால் அவ் வூரின் பழம் பெயரை மாற்றித் தாகந்தீர்த்தான் புரம் என்று மக்கள் வழங்கத் தொடங்கினர் என்று அறிஞர் கூறுகின்றனர்,

(தொடரும்)

உவமைகள்.

வித்துவான் திரு. அடிகளாசிரியர்,
(தி. ஆ. அ. தே. கரந்தைப் புலவர் கல்லூரி.)

புலவர்கள் ஒன்றினைக் கூறும்போது உவமையிட்டுக் கூறுவர் அவ் வுவமை சொல்ல வேண்டிய பொருளை விளக்கியோ அல்லது வேறு சிறந்த பொருளை அறிவுறுத்தியோ அல்லது புனைந்துரையாய் நின்று அழகினை விளைத்தோ நிற்கும். கீழே குறிப்பிடும் உவமைகள் நமக்குச் சிறந்த மருத்துவப் பொருளைத் தருகின்றன. இவ் வுவமைகள் சோதிட நூலாகிய கல்யாண வர்மன் சாராவளி பதினோராவது அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

சு.5 " திங்கள் தனது பர மோச்சத்திலிருந்து வெள்ளியால் பார்க்கப் பெற்றிருந்தால் 'சாதிக்காயும் சாதிபத்திரியும் சேர்த்து வைத்த கியாழம் கடினமான அதிசாரத்தை நீக்குவது போல்' எல்லா வித அரிட்டத்தையும் நீக்கிவிடுகிறான்."

சு.6 " திங்கள் உள்ள இராசிக்கு ஆறு மிடத்திலும் எட்டா மிடத்திலும் ஏழா மிடத்திலும் தீக்கோள் களுடைய சேர்க்கை யில்லாமல் நற்கோள் களுடைய சேர்க்கை மட்டு மிருந்தால் அத் திங்கள் கல்யாண கிருதம் 'பூசணி நெய் அல்லது கூஷ் பாண்ட கிருதம்' உன்மாதத்தைப் போக்குவது போல், எல்லா அரிட்டத்தையும் விலக்குகின்றான்."

சு.7 " திங்கள் நற்பலனைச் செய்கின்ற எந்தக் கோள் களோடு கூடி யிருந்தாலும் அல்லது அந்தக் கோள்களுடைய திரைக்கரணத்தி லிருந்தாலும் 'உப்பு கலந்த நீர் காது வலியை நீக்குவது போல்' எல்லா அரிட்டத்தையும் நீக்குகிறான்."

சு.8 "திங்கள் தேய்பிறைய ஞனுலும் நற்கோள்க ளுடைய சட் வர்க்கத்திலிருந்து நற்கோள்களால் பார்க்கப் பட் டிருந்தால் 'வாந்தியெடுத்தல் பேதி யாத லாகிய இவைகள் கபம் பித்தம் என்னும் இவைகளின் குற்றங்களை நீ க் கு வ து போல்' எல்லா அரிட்டத்தையும் போக்கடிக்கிருன்."

சு.9 "நிறைந்த கலைகளோடு கூடிய திங்கள் துவாத சாம்சத்தில் நற்கோள்களின் வீட்டி லிருந்தால் 'மோர் மூல ரோகத்தை நீக்குவது போல்' எல்லா அரிட்டத்தையும் அழித்து விடுகிருன்."

சு.13 "திங்கள் நின்ற இராசியின் அதிப ஞன கோள் எல்லாக் கோள்களாலும் பார்க்கப்பெற்று இலக் கினத்தி லிருந்தால் 'நல்ல மிளகும் சரக்கொன்றை யும் அரைத்து உண்டாக்குகின்ற மையானது வெள்ளெழுத் தென்ற கண்ணின் நோயைப் போக்குவது போல்' எல்லா அரிட்டங்களையும் போக்கிக் குழந்தையைக் காப்பாற்றுகின்றது."

சு.15 "திங்கள் நிற்கும் இராசிக்குப் பன்னிரண்டா மிடத்தில் வெள்ளி புதன் இவர்களும், பதினோரா மிடத்தில் தீக்கோள்களும், பத்தா மிடத்தில் வியாழனும் இருக்கின். 'அகத்திப் பூவின் சாற்றி ஞல் செய்த நசியம் நான்கா முறைக் காய்ச்சலைக் கெடுப்பது போல்' எல்லா அரிட்டங்களையும் போக்கும்."

பாரதியாரின் நாட்டுணர்வு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் உஅ—மலர் சு, பக்கம் 173.)

வழி பாட்டின் வன்மையிலும் தத்துவத்திலும், பாரதியார், நாட்டன்புக் கனலை, இவ்வாறு வளர்த்துப் பின்னர் அதனையே மக்களது ஆவி தொறும் பொருத்தி, வாழ்வை, நாட்டின் சக்திக் கேற்றவாறு தியாகத் திறலுடன் உரிமையாக்க வழி கோலினர். நாட் டன்பைத் தாயன் பொடு ஒன்று படுத்தி, பாரதியார் பல்வேறு மக்க ளுள்ளத்தை ஒற்றுமை யுறச் செய்யும் முறைமையால், வாழ்வி னியலையும், அச் சக்தி யன்னையின் அரு ளொளியும் தெய்வ வனப்பும் கொண்டு திகழும்படி விளங்க வைத்தார். மற்றும் நாட்டின் பழம் பெருமையும் செழுமையும் திகழ வைத்து நாட்டு வேட்கையினை உரிமையோடு எழச் செய்ய 'எங்கள் நாடு' என்ற பாட்டின் கண், பாரதியார், தன்மை நவிற்சி சிறக்குமாறு கவிதை ஒளியால் நாட்டு மக்க ளுள்ளங்களில் நாட் டன்பினைப் பொலி வொடு பொங்க வைத்த பான்மை உணரற் பாற்று,

மன்னு மிமயமலை யெங்கள் மலையே!
மாநில மீததுபோற் பிறிதிலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற்கெதி ரெதுவேறே!
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசையே தொரு நூலிதுபோலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கில்லையீடே. [க]

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன்னாடு
நாரதகான நலந்திகழ் நாடு
நல்லன யாவையுநாடுறு நாடு
பூரணஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பி ரானருள் பொங்கியநாடு
பாரதநாடு பழம்பெரு நாடே
பாடுவமிஃதை யெமக்கிலை யீடே. [உ]

இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினிமண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணியிழி தொழில்புரியோம்
தாய்த் திரு நாடெனி லினிக்கையை விரியோம்.

கன்னலுந் தேனும் கனியுமின் பாலும்
கதலியும் செந்நெலும் நல்குமெக்காலும்
உன்னதமாகிய நாடெங்கள் நாடே!
ஓதுவமிஃதை யெக்கிலே யீடே! [ரு]

வளமும், தொழில் வகையால் பயனும், கலையும் கவியும், அறமும் வீரமும், தயையும் தவமும் முதலியவற்றுற் சிறந்த பொலி வுடைய நாடு பாரதியாரது விழிகளுக்குத் தேட்ட மில்லாத் தெய்வமாக விளங்கியது. அதனைப் பரா சக்தி யின் வடி வெனப் பராவுவா ராயினர். அது கடவு ளின்பத் திலும் கலை ஞானத்து செல்வத்திலும் இணை யிலாது வீறுடன் விளங்குவது எனப் பகர்ந்து, தாய் நாட்டிற்கு அருட் பணி புரிவது பேரின்ப மென, வீரம் பெருகும் வெற்றி யுணர்வுடன் பேரிகை கொட்டுவார். 'நம் நாடே நமது வீடு. நமது நாடு பீடுற, நாட்டிற்காக உழைப்பது நமது பிறப் புரிமை. அப் பிறப் புரிமை வழங்கும் செல்வம் நமது வாழ்வில் இ ழை ந் து இலங்கும் இன்பம்' என பாரதியார் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி, நாட்டை, தெய்வக் கன்னியாகக் கருதி, நாட்டிற்கே பின் வருமாறு வணக்கமும் தொண்டும் செய்ய முற்பட்டார்.

எந்தையுந் தாயுமகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்

முந்தையராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்

சிந்தையிலாயிர மெண்ணம் வளர்த்து
சிறந்தது மிந்நாடே—இதை

வந்தனை கூறி மனத்திலிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ!

இன்னுயிர் தந்தெமைமீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்

அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
யறிந்தது மிந்நாடே—அவர்

கன்னியராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுடலின் புறநீர் விளையாடியில்
போந்தது மிந்நாடே!

மங்கையராவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்

தங்கமதலை களீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்

துங்கமுயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்

அங்கவர்மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே!

இப் பாக்களின் வழி கவிக் குயிலாகிய பாரதியார், 'நமது விழி எதிர் காணும் தெய்வங்களாய அன்னையரும் தந்தையரும் பிறந்து மகிழ்ந்து வாழ்ந்ததும் இந் நாடே! நமது முன்னோரது சிந்தையில் எழுந்த பண் பாடுகள் யாவும் இசையுடன் வளர்ந்து சிறந்த வாய்ப்பினைக் கொண்ட இந் நாடு அவர் தம் பூத உடலகத்தின் துகள்களை நுகர்ந்து அரிய விளக்கங்களை யெல்லாம் சொரியும் குறிக் கோளை யுடையது. நமக்கு இன்னுயிர் தந்து தாயன்புடன் அருள் சுரந்து நம்மை நன்று வளர்த்ததும் இந் நாடே! நாம் மனை யறம் பேணி நன் கலன்களாகிய மக்களைப் பெற்று மகிழ் துளும்பி அறைபோகா நன் னெஞ்சொடு நம் பணி யாற்றி முடிவதும் இந் நாட்டிலே யாதலின், நமது தாய் நாட்டைப் போற்றி வாழ்தல் நமது வினைத் திறன்' என ஆவேச முற உணர்த்தி நாட்டன்புக் கலையே தமது சமய மெனப் புலப்படுத்திய திறன் அறிந்து இன் புறற் பாலது.

இத் தகையாளது திண்மை மறைய நேரினும், அவள், தான் மறையாது நாலிரு திக்கினும் நின்று தீயதை ஒருங் கொழியச் செய்து சீருறும் பெற்றி தேற்றி பாரதியார் நாட்டு மக்களுக்குச் செய்யுள் வழி செவி யறி வுறுத்தியது, அவர் தம் நாட்டு உணர்வின் எழில் மாண்பினை நன்கு புல னுக்கியது. 'எங்கள் தாய்' என்ற செய்யுட் சொற் கள் மூலம் கன்னித் தாயின் இயல்பினை நுவலு மாற்ருல், நாட்டு மக்கள், அறிதற் குரியன அறிந்து, தீது செறுத்து நன் னெறியின் பால் ஒழுகு முறையினை பாரதியார் குறிப் பாகக் கிளத்தலால், அக் கவிதையின் மெய்ந் நிலையினை கருத்தாய்ப் பகுத் தறிதல் இன்றி யமையாத தாகு மென்க.

இவ் வணம் சமுதாயத்தைப் பாலூட்டி வளர்க்கும் தாய் நாட்டினை வழிபடும் தத்துவத்தில் திளைத்த பாரதியார் அத் தத்துவத்தின் கண் கடவு ளின்பத்தினையும், கலை ஞானத்து விழுப்பத்தினையும் அறிந்தனர். கதிரிற் இறைவ னது ஒளியைக் காண்பது போல், பாரினில் கன்னித் தாயை உணர்ந்து, தாயின் பெருமையை உன்னுவா ராயினர். இவரது அகக் காட்சியில் உரு விளக்கமாகத் தோன்றிய கன்னித் தாய், யாவரும் வகுத்தற் கரிய பிராயத் தாள். முப்பது கோடி முக முடையாள். மூவாறு மொழி யுடையாள். எனினும் சிந்தை யொன் றுடையாள். நாவினில் நான் மறை உடையாள். தன்னை நாடியவருக்கு தண் ணருள் புரியவும், தீயவரை வீழ்த்தவும் நலந் திகழ் வாளினை ஏந்திய கையினை யுடையாள். தன் தடக் கைகளால், அற மெல்லாம் வளர்ப்பாள். தன்னைச் செறுத் தாரை துகள் செய்து அவர் தம் குருதியிற் றிளைப்பாள். தான் ஆண்டருளும் பாரியினும் பொறை மிக் குடையாள். கருணை பொழியும் முக முடையாள். எனினும் துட்டரை யொழிக்கும் வாளிடை யொளிரும் துர்க்கை வடிவினள். அரி, மால் முதலோரை வணங்கும் இயல்பினள். யோகத் திலே நிக ரற்றவள். யோக நிலையிலும் என்று மழியா வரந் தரும் இடையருத மகிழ்வில் திளைத் திருக்கும் செவ்வி யுடையாள். மற்றும் நல் லறம் நாடிய மன்னரை வாழ்த்தி நயம் பல புரிவாள். கொடுங் கோல் மன்னரை வெறி கொண்டு விழுங்கி இன்பக் கூத்தாடுவாள். மலையத் துவசன் பெற் றெடுத்த கன்னி எங்கள் தாய்! என இன்ப வெறி கொண்டு நாட்டு மக்களது அறியாமை மருட்

செறிவை எதிரேறிக் கலக்கும் பான்மையில் கூத்தாடுவார்.

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுணராத
இயல்பின ளாமெங்கள் தாய்.

யாரும் வகுத்தற்கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருளிந் நாளுமோர் கன்னிகையென்னப்
பயின்றிடுவா ளெங்கள் தாய்.

முப்பதுகோடி முகமுடையாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டு டையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்.

நாவினில் வேதமுடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள்—தனை
மேவினர்க்கின்னருள் செய்பவள், தீயரை
வீட்டிடு தோளுடையாள்.

அறுபது கோடிதடக் கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்.

பூமியினும் பொறைமிகக் குடையாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப்பார் முனநின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.

கற்றைச் சடைமதிவைத்த துறவியைக்
கை தொழுவா ளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரி கொண்டேமுலகாளு
மொருவனையுந் தொழுவாள்.

யோகத்திலே நிகரற்ற வளுண்மையு
மொன்றென நன்றறிவாள்—உயர்
போகத்திலேயு நிறைந்த வளெண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயினவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்.

வெண்மை வளரிம யாசலன்றந்த
விறன்மகளா மெங்கள் தாய்—அவன்
திண்மை மறையினுந் தான்மறையாணித்தஞ்
சீருறுவா ளெங்கள் தாய்!

இத் தகைய வாறு பெருமையும் வல்லமையு முடைய கன்னித் தாயின் அணி நுதலின் கண், மாறி வரும் காலத்தின் கோலத்தால், இழிவு தரும் துயர் தங்கி யுள்ளதை பாரதியார் கண் டுணர்ந்தக் காலே, அவர தாவியில், தாயின் பெருமை யொளி துண் ணெனக் கவிதையாகக் துலங்கிற்று. பாரதியார், தனது ஆர்வக் குரலுக்கு கன்னித் தாய் கன லேற்றியதாக உணர்ந்தார். தனிமைக் கனவு இனிமை பயக்க, இன்ப மலர்ச்சியால் பாரதியார் கன்னித் தாய் வெற்றி கொள்ள, பின் வருமாறு கவி மாரி பொழிந்தார்.

சிறந்து நின்ற சிந்தையோடு
தேய நூறு வென்றிவள்
மறந்தவிர்ந்தங் நாடர் வந்து
வாழி சொன்ன போதிலும்
இறந்து மாண்பு தீரமிக்க
ஏழ்மை கொண்ட போதிலும்
அறந்தவிர்க் கிலாது நிற்கும்
அன்னைவெற்றி கொள்கவே!

உள் ளெழுச்சி மீக் கூர பாரதியார் தம் காட்சிப் புலமையில் கன்னித் தாயின் உரு விளக்கத்தை அறிந்து மெய் யின்பம் வேண்டி, அதனை யே யியல்பாகத் தேடுவா ராயினர். தமிழ் வழக்கு, உல கிடைப் பரந் திருக்கும் அயல் வழக்கின் துறை யெல்லாம் வெல்லும்படி பல்கிப் பெருக, தன்னை நாடி நின்ற புலவர் மக்களுக்கு உண்மைப் பொருளை யீந்த கன்னித் தாய் இது போது வண்மை தீர்ந்து தன் மனத்தை கடவு ளுண்மையினை வளர்க்கும் செழிப் பொன்றிலே ஈடு பட்டிருந்ததைப் பாரதியார் காண, கன்னித் தாயின் உண்மை யொளி அவர் தம் ஆவியின் கண் மின் னெனப் பாய்ந்தது. பின்னர் கன்னித் தாய்க்கு வணக்கம் செய்து,

வில்லர் வாழ்வு குன்றி யோய
வீரவாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்

சொல்லு மிவ் வனைத்தும் வேறு
சூழு நன் மையுந்தர
வல்ல நூல் கெடாது காப்பள்
வாழி யன்னை, வாழியே!

எனக் கவலை போக துணிவு கொள்வார். மக்கள் வாழ்வியலில் புதியதோர் மலர்ச்சி யளிக்குமாறு தெய்வீக சுதந்திரத்தில் நாட்டு மக்களுக்கோர் ஆசையினை கன்னித் தாய் நிலை நிறுத்தச் செய்யும் சீர்மையினை உணர்ந்த பாரதியார், அவ் வன்னையின் அருளாலே சுதந்தர சக்தி உல கெங்கும் கலை மணம் வீச அவாவினர்.

'இதந் தருந் தொழில்கள் செய்து
இதிரும் புவிக்கு நல்கினள்
பதந் தரற் குரிய வாய
பன் மதங்கள் காட்டினள்,
விதம் பெறும் பல் நாட்டினர்க்கு
வேறோ றுண்மை தோற்றவே
சுதந் திரத்தி லாசை யின்று
தோற்றினள் மன் வாழ்கவே!'

என்று பாடி முழங்கிக் கொண்டே, பாரதியார் சுதந்தரத் தீ, அத் யான்மக் கனலாய் ஓங்குமாறு, தமிழ் உள்ளங் களைப் பூரிக்கச் செய்வார்.

இவ்வாறு இன்ப வெறி கொண்டு இன்னிசை வாழ்த்தும் பாடிய பாரதியார், பின்னர். தீஞ் சொற் கவிதையஞ் சோலையில் புகுந்து வாடாக் கவி மலர்களைக் கொய்து தமி ழன்னைக்குச் சூட்ட முற் படுவா ராயினர். ஆங்கே மேற்றிசையில் விரியும் கிழக் கொளியில், பச்சை மணிக் கிளியைக் கண்ட இயற் கவியின் கனிந்த உள்ளத்தில் சுவை விஞ்சிய அற்புதக் கவிதை மலர அக் கிஞ் சுகத்தோடு கொஞ்சுவா ராயினர்.

பைங் கிளியே! எனக்கு யோகப் பிச்சை அளித்த தாயின் பெயர் யாது? என பாரதியார் வினவுவார்.

—இச் சகத்திற்

பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமாதேவி யெனப் பாடு

எனவும் பகர்வார். மற்றும் தனக்கு ஆனந்த மாளுளின் பொன் னாட்டின் நிலப் பரப்பு வானுற வோங்கிய பே ரிமய

மலை முதல் பெண் குமரி யீருக யுள்ள தென்றும், தம்மைச் சின் மயமா யறிந்த நனி பெரியாருக்கு இன்னமுது போன்ற காசித் தலம் தனக்கு உயி ராளுள் நலமுற வாழும் நக ரென்பர். சுதந்திர வேள்விக் கனலை வளர்த்து வீரக் கனல் நிரம்பிய உள்ள முடையாரை இன்ன லறக் காக்கும் அக் கன்னிக் குரிய ஆறு,

> 'தான் போம் வழியெலாந் தன்மமொடு பொன் விளைக்கும்
> வான் போந்த கங்கை'

என வாழ்த்துவார். தொன் மறைகளில் இலங்கும் கன்னித் தாயின் வாலை சக்தி வளரும் மலை, ஞாலத்தில் ஈடிலதாய் விண்ணைத் தாங்கி நிற்கும் வெள்ளைப் பொருப்பு என செப்புவார். சீருஞ் சிறப்பு மோடு செல்வ முடைய எங்கள் தாய் வெறுந் தேரிற் பரி மிசை ஊர் வாள் அல்ல ளென்றும், அவள் பாரனைத்தும் அஞ்சும் அரி மிசையே மகிழ்ந்து ஊர் வாள் என உரைப்பார். கருணை பொழியும் முக முடைய எங்கள் தாய் கையி லேந்தும் குலிசமோ, செறுத் தார் பாலும் தண் ணளியால் வீழா தென்றும், அப்படி வீழ நேரின் அத னின்றும் தப்பிப் பிழைக்க இயலா தென மொழிவார். எங்கள் அன்னையின் திரு முன்றி லிடை அதிர்ந்து அணி கிளரும் மணி முரசு 'உண்மை எங்கணும் நிலவு மாறு இயற்றுக அறம்' என ஒலிக்கு மென்றும், அவ் வெற்றி முரசு எங்க ளம்மை மனங் குளிர வைக்கும் முத்தி தரும் வேத முரசு என முழக்குவார். எம தன்னை யின் மணி மார்பில் விளங்கும் மாலை, தன்னைச் சாராரை 'முற்றாக் குறு நகையால் முற்றுவித்துத் தான் ஒளிரும் பொற் றாமரைத் தாராகும்' என இயம்புவார். புன்மையினையும் தீயனவையும் விலக்கும் எங்கள் தாயின் மணிக் கொடி, தம தடியார்கள் மகிழ் வெய்து திகழவும், பண் படாத தீயர் நலியவும் இன்ப மாவொளி பரப்பும் குன்றாத வயிரக் கொடி யென்றும், அது காற்றின் மேற் பாயும் இடி புயலே போன்று எங்கணும் வீறிட்டுப் பாய்ந்து என்றும் பறக்கும் கொடி யாகும் என விளக்கமுற அறி வுறுத்துவார். இவ்வாறு பாரதியார் தன் இதயத்தின் கண் அமர்ந்திருக்கும் அம்மையின் பத்து அங்கங்களையும் தேர்ந் தறிந்து, சுவை கனிய அழகுறுத்தும் நயம், கவிச் சித்தராகிய பாரதியார் தனது உயிரால் புனிதமான நாட் டன்பு விளக்கினைத் தூண்டும் பரிசினைக் காட்டும்.

எல்லை யற்ற அகக் காட்சியில், நாட்டுத் தெய்வத் தாயின் திரு வுருவினைக் கண்டு, உள் ளெழுச்சியால் இன்ப மலர்ச்சி கொண்ட சிந்தனைக் கலைஞர், தாய் நாட்டை மக்கள் புறக் கணித் தயர்ந்த இருள் கூர் யாமம் கழிவதை யும், தெய்வத் தாய் புதிய கலை நலங்கள் பெற திரு வோலக் கம் கொண்டு திரு வருள் புரியுங் காலம் அணித்தா யுள்ளதை உணர்ந்தார். தாய் நாட்டின் சக்தி தெய்வத்தை மக்களுக்கு அறிமுகப் படுத்தும் முறைகளையும், காட்சியை யும் கணித்துப் பின் அத் தாயினை வணங்கும் முயற்சி யில் ஈடுபட்டு அமுதூறும் தமிழ் மொழியால் திருப் பள்ளி யெழுச்சி பாடி, நாட்டு மக்களாகிய நாமே நமது நாட்டை நாளுமே போற்றி ஆட்சி நடத்துவோ மென்ற உணர்ச்சி யையும் ஆர்வத்தையும் பெற வைத்தார். மற்றும் நாடும் திருவோங்கித் தழைத்து மாண்புற, மக்கள் யாவரும் தம் தம் கடமை யுணர்வால் தாந்தாமே தம் குறையினை ஆய்ந்து திருந்தி, பின் குறைவிலா நிறைவுட னிருத்தல் தலையாய தென்பதையும் அறிவுறுத்தினர். நாட் டன்பு பெருக்கமுற, மக்க ளார்வத்தையும் உணர்ச்சியையும் கன லேற்றி முழக்கிய பாரதியாரது வாக்கின் போக்கை, அனுபவித் தறிதல் சாலவும் விரும்பப் பால தாதலின், புத் துணர்ச்சி அளிக்க வல்ல அத் திருப் பள்ளி யெழுச்சிப் பாடல்களில் நுகரப்படும் தனி யழகை இம்மியும் விடாது சற்று காண்குவம்.

பொழுது புலர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மையிருட் கணம்போயி னயாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும்பரவி
யெழுந்து விளங்கியதறி வெனும்இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்,
விழி துயில்கின்றனை யின்னுமெந்தாயே !
வியப்பிதுகாண் ! பள்ளியெழுந்தருளாயே ! [க]

புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
பொங்கிய தெங்குஞ் சுதந்திரநாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்;
வீதியெலா மணுகுற்றனர் மாதர்;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற்கின்றார்;
அள்ளிய தெள்ளமுதன்னை யெம்அன்னை !
ஆருயிரே ! பள்ளி யெழுந்தருளாயே ! (உ)

பரிதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்;
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரங்கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனையம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத்தேற்றாய்!
நிர்மலையே! பள்ளியெழுந்தருளாயே! [௩]
நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ?
பொன்னனையாய்! வெண்பனி முடியிமயப்
பொருப்பின னீந்தபெருந்தவப் பொருளே!
என்னதவங்கள் செய்தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம்யாமே!
இன்னமும் துயிலுதியே லிதுநன்றோ?
இன்னுயிரே! பள்ளியெழுந்தருளாயே! [௪]
மதலைய ரெழுப்பவும் தாய்துயில்வாயோ?
மாநிலம் பெற்றவளிஃ துணராயோ?
குதலைமொழிக் கிரங்கா தொருதாயோ?
கோமகளே! பெரும் பாரதர்க்கரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டுங்கூறி
வேண்டியவாறுனைப் பாடுதுங்காணாய்!
இதமுறவந்தெமை யாண்டருள் செய்வாய்!
ஈன்றவளே! பள்ளி யெழுந்தருளாயே! [௫]

நாடாளும் கன்னித்தாயை துயிலெழுப்புதற்காக எழுந்த இப் பாக்கள் நாட்டுப் பற்றினைப் பெருக்கும் வன்மையுடையன. மற்றும் எளிய சொற்களும் நடையுமுடைய இப் பாக்களில் இழைந்து நிற்கும் ஆழ்ந்த உட்பொருளின் பொலிவினைக் கூர்ந்தறிவது தமிழ் மக்களது கடன்மையாகும். நாட்டில் வளரும் வேற்றுமைப் பிளவுகளைக் களைந்து ஒற்றுமை நிறுவும் வகையால் பாரதியார் இப் பாக்களின் வழி ஒப்புர வொழுகும் ஒள்ளிய அறத்தினியலை நெகிழ விடாது உணர்த்தும் பண்பு நன்கு தேறற்பாலது.

பொதுவாகக் கூர்ந்து நோக்கின், பாரதியார் தான் பிறந்த நாட்டைப்பற்றி பாடுங்காலை, நினையப் பிறருக்கரிய நாட்டன்புக் கனல் தழைத்தோங்கும் முறையினையும் அதனுன் மக்கள் பொலி வெய்தும் வகையினையும், அவர் பேரிலக்காகக் கொண்டு, அத்துறையில், கவிதையின் வழி தம் முயற்சியை இடை யீடின்றி உஞற்றி வந்த பெற்றி, இனிமைப் பாடுந் தலைமைப்பாடும் ஒருங்கமைந்த அவரது நாட்டுப் பற்றினை நன்கினிது விளங்க வைக்கும்.

ஆங்காங்கே (18)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை

சில தொடர்மொழிகளின் (Phrases) விளக்கம்.

(1) **வேளை வினைக்கெட்டு:—** இத் தொடர் மொழி "வேளை மெனக்கெட்டு" என வழங்குகிறது. இது மருவிக் கெட்டது போலும்.

ஒருவர் ஓர் வினையில் தலையிட்டு அது கை கூடாவிட்டால் வேளையும் (Time) வினையும் (Labour) கெட்டுப் போனது என்பதை யுணர்த்துவது 'வேளை வினைக்கெட்டு' என்னும் தொடர் மொழி (Waste of time and labour).

(2) **சட்ட வட்டம் :—** ஒருவர் சட்ட வட்டமாகப் பேசுவதாகச் சொல்லுகிறோம். சட்டம் என்னும் பொருள் நேராகயுள்ளது. வட்டம் என்பது ஒரு சுழி (Circle) எனவே ஒருவர் நேராகவும், ஒரு சுற்றளவுக்குள்படவும் பேசுவதாகவும். (Straight and with in a circumscribed area or sphese) அளவில்லாமல் நீட்டிக்கொண்டும், எல்லையில்லாமலும் பேசக்கூடாது. எனவே சட்ட வட்டமாகப் பேசுவதே பொருத்தமாகும்.

(3) **விடேன் தொடேன் :—** ஒரு செயலில் முனைந்த பொழுது அதை விடவும் கூடாது, மற்றொரு செயலைத் தொடவும் கூடாது. ஒன்று முற்றுறுதபொழுது மற்றொன்றைத் தொட்டால் இரண்டு வினைகளும் கெட்டுப் போய் விடும்.

(4) **சட்டி முட்டி :—** சட்டிக்கும் முட்டிக்கும் ஒரு வேற்றுமை யுண்டு. சட்டி அகண்ட வாயுடையது. முட்டி சிறு முட்டாயுள்ள தல்லாமல் வாய் குறுகியிருக்கும். பானை என்னும் கலனும் குறுகிய வாயுடையதே. இந்த வேற்றுமையே சட்டிக்கும் பானைக்கும் உள்ளது.

அரிக்கும் சட்டி என்னும் கலனின் பின் பக்கம் குண்டாயிருக்கும். ஆனால் வாய் அகன்றிருக்கும், எனவே இதற்கு சட்டி என்னும் பெயர் பெற்றது.

(அரிப்பார்=மண்ணிலிருந்து பொன்னைப் பிரிப்பவர். இது போலவே அரிசியிலிருந்து சிறிய கற்களைப் பிரிப்பது அரிப்பதாகும். இவ் வினைக்காகப் பயன்படுத்தப்படும் சட்டி அரிக்குஞ் சட்டி என்னும் பெயர் பெற்றது. ஆனால் நம்மவர்கள் 'அரிக்கஞ் சட்டி' என்பர்.)

சொல் விளக்கம்.

பட்டிக்காடு :- இக்காலத்திலும் ஆலம்பட்டி, ஆலங்காடு, வேப்பம்பட்டி, வேலங்காடு என்னும் பெயர்கள் சிற்றூர்களுக்கு வழங்குகின்றன. இது தொன்று தொட்டு வந்தப் பெயர்கள் போலும். எனவே இவ்வாறான சிற்றூர்களுக்குப் பொதுப் பெயராக அப் பெயர்களின் 'பட்டி' 'காடு' என்னுஞ் சொற்கள் ஒன்று சேர்க்கப்பட்டு "பட்டிக்காடு" என வழங்கினர் போலும்.

ஒரு சொல் பல பொருள் பெற்றது.

(1) இரை :- இச் சொல்லிற்கு முதற்பொருள் சிதரச் செய் அல்லது சிந்து என்னும் பொருள். எனவே பிள்ளை சோற்றை இரைக்கிறது என்றால் சோற்றை சிதருகிறது அல்லது சிந்துகிறது என்பதாகும்.

(2) இரை=தீனி. பறவைகள் சிதரிக்கிடப்பனவற்றையே தங்களுக்கு உணவாகப் பொறுக்கித் தின்னும். எனவே சிதரிக் கிடப்பன அதாவது இரைந்துள்ள 'இரை' யாயிற்று.

(3) இரை=கிணற்றிலிருந்து நீர் எடுத்தல். கிணற்றிலிருந்து நீர் எடுக்குங்கால் மரக்காலில் உள்ள நீர் சிந்தும் இவ்வாறு நீர் இறைபடுவதால் இவ் வினைக்கு 'இரை' என்னும் பெயர் வந்தது.

(4) இரை=ஓசை செய்தல். மேற்காட்டியவாறு நீர் இரைக்கும் பொழுது சிந்திய நீர் கீழே (தண்ணீருக்குள்) விழுந்து ஓசை உண்டாக்கும். எனவே, மக்கள் பேச்சினால் அல்லது கத்துவதால் உண்டாகும் ஓசையை 'இரைச்சல்' என்கிறோம்.

புலவர் பிணை போன வரலாறு.

பூமானு ரத்தமரும் புங்கவன்போல் வாழ்ந்திருக்குஞ்
சீமா னுயர்ந்தகங்கைச் சீர்க்குலத்தான்—தேமேவுங்

கங்கா தரச்செழியன் காவலாஞ்—சேலத்தின்
வெங்கடா சலதீரன் வெல்லமைச்சாய்—மங்காமல்

வேளாளர் ரெட்டியர்கள் வேந்தர் வியன்மறையோர்
வாளார்ந்த வெள்ளிகுல மன்னவரும்—தாளாண்மைக்

கொல்லர் வடுகமார் கோபாலர் செங்குந்தர்
வல்லதோர் சீர்கருணர் வாணிபர்கள்—வெல்லுதொழில்

துளுவ ரகமுடையார் துயரகற்றும் வன்னியர்கள்
தெளிவான சேடர்களும் சேணியர்கள்—உளம்வெருவாக்

கவறைப் பவிஞ்சையருங் காஞ்சனமும் பைங்கூழும்
நவநிதிசேர் பண்ரெட்டி நல்லாரும்—சிவனையே

போற்றுதெய்வ தாசியரும் பொற்பமரும் விஞ்சையரும்
யேற்றவரு மேளத்தா ரியாழினர்கள்—சிற்றமிகுஞ்

சேவகர் குமாரவற்கஞ் சேர்ந்து நன்ருய் வாழுநாள்
பூவுலகாள் டிபு புவிமுழுதும்—மேவியே

மம்முதல்லி கான்சாயபு மகராயன் சீமை யெல்லாஞ்
செம்மைத் தழுன்மடுத்துச் சிரகற்றி—நன்மைபெறு

மங்கை மடமாதர் மறையவர்க ளென்னுமல்
பொங்குதுயர் செய்து பொலிவகற்றி—யெங்கெங்கும்

மாவுங் க்ரிப்படையும் மன்னுவித்துத் தியாக துர்க்கந்
தாவிநின் று டிபவனுஞ் சாற்றுவான்—மூவருமாய்க்

கேசவரா யன்திவான் கிருட்டினரா யன்னுடனே
தோசிப் பசாசர்களே தூற்றுவார்—வாசியுடன்

நாலு குசும்புடனே நற்ரு மறைத் தடஞ்சூழ்
சேலநகர் சேர்ந்து தேத்தடைத்து—வாலர்முதல்

விருத்தர்களே யீரு விடாமறப்படிக்கு மெத்த
வருத்திப் பணம்வாங்கி வாருமென—வுருத்தெழுந்து

கன்று டருந்துலுக்கர் காபி......யன புண்டாரி
மண்ணுள் மராட்டியரும் மாவலியர்—முன்னுக

மறலியெ னப்பெயர்ந்து மண்ணதிர வந்து
திறல்மருவுஞ் சேலநகர் சேரவந்து—விறலுடனே

எட்டிக்குஞ் சூழ்ந்து எங்கெங்கும் பாராவாய்க்
கட்டிக் கதவடைத்துக் காவல் செய்து—உட்டதும்பி

நின்றேல மிட்டலறி னெஞ்சந் தடுமாறிக்
குன்றுச் செழியர்குலக் கோமுதலும்—நன்றான

கூகையூர்ச் சீமையார் கோட்டையிறை வாசநல்லூ
ரோகைபெறு நாட்டார் உலகுபுகழ்—வாகைபெறுங்

கல்லைநகர்ச் சீமையார் கனவாறை நாட்டார்கள்
எல்லவருந் தத்தளித்து ஏங்கிநிற்க—வல்லவனுஞ்

செழியன் தளவாய்ச் சிறந்தவெங்க டாசலமாம்
வழுவில் புகழ்பெற்ற மந்திரியும்—யெழிலாக
எதிர்கண்டு மூவரையு மில்லிற் கொடுவந்து
அதியா றிரண்டா யிரம்நன்றாய்—மதிமிகுத்தோன்

தருவனெனப் பேசித் தக்கவற்கு நல்விருந்து
மருவும்படி புரிந்து மாநிதியந்—திருவருளாற்

பதினாயிரஞ் செலுத்திப் பாக்கியிரண்டா யிரத்துக்
கிதமாய்ப் பிணையிருப்பா ரியாரெனவே—சதிராகப்

பின்போக வென்னவே பேசுமறையோர்க ளெல்லாந்
தன்வாய்க் குளறியிட்டுத் தத்தளித்தார்—அன்பான

உறவின் முறையரர் உண்டுங்கியே மறைந்தார்
குறைவில் கொலலர் நாய்க்கமார் கூசினார் நிறைமருவுஞ்

சாமாசிக ரெல்லாந் தன்னினைவு தான்மறந்து
பூமேற் படுக்கையிட்டுப் போதமற்றார்—தேமேவு

காராளர் தங்குலத்துக் காவலன்என் னைநோக்கி
வாராயென வழைத்து மனமுருகி—வேராக

நல்வசன மாக நயத்தோ டுரைத் திடுவார்
கல்மனதாய் யாருங் கவடுசெய்தார்—வெல்வகைக்கி

யாருமிவர் பின்போக எண்ணவிலை யான்போகி
லூரலைந்து போமவற்று லுன்மனது—தேருறவே

திடம்படுத்தி நற்பிணையாய்ச் சேர்ந்திருப்பாய் நன்றாய்ப்
படமருவு பாரிலென்றே பலபேசி—யுடன்படுத்தி

டீபுதள வாயிடத்திற் சேரவெனை யொப்புவித்து
யாபத்து நீக்கியன்றவ் வூர்காத்தான்—தீவகிகர்

கொளுந்தி யெரி கண்ணானைக் கோவினிடம் போகி
யுளங்குளிர நன்மொழிக ளோதவே—வளங்களுடன்

மாவுங் கலையாடும் வளர்மாடு மூர்கொடுத்துச்
காவலிருத் திப்பணத்தைக் கண்டினியாய்—யாவலுடன்

யிரண்டா யிரம் ரூபாய் யீந்து நும்மூர்க் கேகெனவே
மருண் டாதாரிக்கும் வசனமதாய்த்—தெருண்டிடவே

சொல்லி யிருந்திடுநாள் துன்றுபணம் செல்லாமல்
வல்லமன்ன னோர்வசனம் வந்துரைத்தான்—வெல்லுபடை

நம்மேல் வரத்தாகு நன்றா யனந்தகிரி
தம்மேலிருந்து பணந்தான் செலுத்தி—யும்மூர்க்கு

யேகென்ற னுப்பியிட யானக் கிரிமேவித்
தோகைமயில் வீரனன்னான் சொல்தவறான்—யீகையினான்

யிலங்கைப் பதியரசை யீர்த்துலகை யாண்ட
நலங்கொளிரா மய்யன்றன் நல்லகத்தில்—கலங்காமல்

அன்னங் கலையடைக்கா யாவும்மிகப்பெற்றே
நன்னயமா யாண்டிருக்க நன்னிதியம்—யின்னமுமேன்

செல்லவிலை யென்றேயென் தேகத் திடரியற்றிக்
கொல்லுந் தொழில்புரிந்துக் கொண்டுபோய்—மெல்லவே

சேர்கான சங்ககிரி சேர்த்து மிகவருத்திச்
சீரங்க பட்டணத்திற் சேர்த்திடவே—பாரரசாய்

மன்னுகின்ற டீபாகு மாக்கோவுட னோதை
வன்னவனுஞ் சீற்றத்தோ டவனூரில்—துன்னியிடுங்

கிட்டங்கியில் விலங்கு கேடகல மாட்டெனவே
சிட்டர்களை யாதரிக்குந் திறலுடையான்—அட்டதிக்கும்

புகழ்ச்சித்த நாத பூபனம புராவத்தன்?
சகம்புகழுந் தீர்த்த கிரிச் சின்னயனும்—அகமெலிந்து

யிருநூறு ரூபாய் யியல்பாய்ச் செலவு செய்து
யிருநூறு ரூபாய் யிறைக் குரைத்து—வெருவாமல்

னானூறு ரூபாயும் நாங்கள் தருவமென்று
னானூறுக்குச்சித்தம் னாற்பதுமே—கோனானை

யிசுமாலுகானுக்கு யேற்றுக்கொண் டென்னை
வசையகல வூர்க்கேகி வருவை யென்றார்—யிசைவாகத்

தென்சேலம் வந்து செழியற் குரைத்தேனுன்
உன் செலவு யெந்தனுக்கு வொவ்வாது—முன்சொன்ன

பொன்தருவ தில்லை போகுமிடம் போதி
பின்சொல்லிப் பிட்சைதனைப் பெற்றே—யிங்கிலுவைப்

பணஞ் செலுத்து மென்றார் பாரில் பிறங்க வந்தேன்
குண முடையீர் நல்ல குறைவிடுத்தீர்—யிணையகன்ற

மான முடையீர் (மதியுடையீர் ?) மாமா தகத்துறுவீர்?
தான முடையீர் தவ முடையீர்—யீனமிலாக்

கல்வி னெறியுடையீர் கவினுடையீர் ரறிவுடையீர்
செல்வ முடையீர் திருவுடையீர்—சொல் கவியின்

பொருளுணர்ந்து யெந்தன் புணைக்கடனைத் தீர்க்க
வருளுவீர் அருளுடையீ ராய்ந்து.

குறிப்பு.

பல யாண்டுகளுக்கு முன் சின்ன சேலத்தில் ஏட்டுச் சுவடிகளைத் தேடிய பொழுது மேற் கண்ட "புலவர் பிணை போன வரலாறு" என்ற நூல் எனக்குக் கிடைத்தது; அது சிதைந்தும் பிழை பட்டும் இருந்தாலும் ஒரு வரலாற்றின் உண்மையை உலகம் அறிவதற்கு ஏதுவா யிருத்தலின் அதனைத் தமிழ்ப் பொழில் மூலமாய் வெளியிடுகின்றேன்.

இங்ஙனம்,
திரு. அடிகளாசிரியன்.

பொருந்துமா? (கஎ)

உளநூலாசிரியர் புலவர்மணி M. குஞ்சிதபாத தேசிகர், நன்னிலம்.

சோழ அரசர்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பல. அவற்றுள் தக்கயாகப் பரணியும் ஒன்று ஆகும். இதனை இயற்றியவர் கவிச்சக்கரவர்த்தி யாகிய ஒட்டக்கூத்தர் என்னும் பெரும் புலவ ராவர். இவர் இராசராசன் II காலத்தில் முதுமையாய் இருந்தார் என்பர்.

தக்கயாகப் பரணி

549. அலைகொன்று வருகங்கை வாராமன் மேன்மேல்
அடைக்கின்ற குன்றா டறுக்கின்ற பூகம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே

மேற்படி உரையில் கண்டன் என்றது சிறப்புப் பெயர். இதனை இயற்பெய ரென்று மயங்கா தொழிக. இராசராசன் என்பது இயற்பெயர் என்றும்,

"வயிரா கரமெறிந்த மானதன் கண்டன்"
"கண்டனை மேதினியாள் காந்தனை"

என்பவையும் இராசராச சோழ னுலா "கண்டன் பவனிக் கவனப் பரி" என்ற மேற்கோளும் கண்டன் என்பது இராசராசன் II இன் சிறப்புப் பெயர் என்பதை வலியுறுத்தும்.

நாளணி செற்றம் நீங்கிச் சிறந்த பிறந்தநாள் வயிற்
பெருமங்கலமும்

தொல்காப்பியம்—புறத்திணையியல்.

மங்கல மாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்தலின் அதனை வெள்ளணி யென்ப. ஆகுபெயரான் அப்பொருள் கூறிய செய்யுளும் வெள்ளணி யாயிற்று.

அரசன் நாடோறும் தான் மேற்கொள்ளுகின்ற செற்ற மாவன சிறை செய்தலும் செருச் செய்தலும் கொலை புரிதலு முதலாயின.

சிறந்த தொழில்க ளாவன (1) சிறை விடுதல் (2) செரு வொழிதல் (3) கொலை யொழிதல் (4) இறை தவிர்தல் (5) தானஞ் செய்தல் (6) வேண்டின கொடுத்தல் பிறவு மாம்.

என்று கூறி 'சிறை விடுதலுக்கு'

"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனுற் போந்தாமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறை தீர்வேந்து குழாம்"

(2) வெள்ளணி நாளை பறைசாற்றி அறிவித்தமைக்கு,

"ஏமாரு மன்னீர் எயில்திறமின் எங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதய நாள்—ஆமாறு
காம நுகருமின் கண்படுமின் என்னுமே
ஏம முரசின் குரல்."

என்ற இரண்டு செய்யுட்களும் முறையே சோழ அரசனை யும் சேர அரசனையும் குறிப்பன வாகும். இவை முத் தொள்ளாயிரப் பாடல்களின் வெள்ளணி யாகும்.

இதுகாறும் கூறியவற்றால், சோழ அரசர்களைக் கூறும் நூல்களில் தக்கயாகப் பரணி ஒன்று என்பதும், அதில் கண்டன் என்பது இராசராசன் IIஐக் குறிக்கும் என்பதும், பிற நூல்களி லுள்ள மேற்கோளாலும் வலியுறும் என்ப தும், தொல்காப்பியத்தில் வெள்ளணியைக் குறித்துக் கூறிய செய்யுட்கள் நான்கும் முத்தொள்ளாயிரப் பாடல் களே என்பதும், வேறு வேறு சரணங்கள் நான்கும் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதும், இங்குக் குறிக்கப் பட்டவை இரண்டும் முத்தொள்ளாயிரத்தில் சேர்க்கப்பட வேண்டியதோடு மற்றவை இரண்டும் வெள்ளணி என் னும் பொருளைக் குறிக்கோளாகக் கொண்டவை என்பதும் போந்த பொருள்களாகக் கொள்க.

பொருந்துமா? ஆராய்க.

வேண்டுகோள்.

அருந்தமிழ் அன்பரீர்,

வணக்கம். நலம். தமிழர்களின் தனிச்செல்வமாய் உலக முழுதும் உச்சிமேற் கொள்ளுகின்ற ஓர் உயர் முழுநூல் திருக்குறளே யாகும். அதன் ஆழ அகலங்களை அறிந்து மகிழ்வதற்கு ஏற்றதொரு சொல்லகராதியும் (Lexicon) சொல்லிசையும் (Concordance) இதுவரை தமிழில் முற்ற முடிந்த முறையில் வெளிவராதிருந்தன. ஆனால் அவை எவரும் எதிர்பாராத புதுச் சிறப்புக்களுடன் "திருக்குறட் சொல்லடைவு" எனும் பெயரோடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேராதரவுடன் அச்சாகியிருப்பது மகிழத் தக்கதாகும். இப் பெரிய நூலின் அரிய சிறப்பியல்களும். அதனைத் தமிழ்ப் பேரறிஞர் பதின்மர் போற்றி அளித்துள்ள மதிப்புரைகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பின்னர் வெளிவரும்.

இந்நூலின் ஆசிரியர் சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி. பொறுப்பு வாய்ந்த வேலையில் நற்பெயருடன் ஈடுபட்டிருந்தும் தமிழ்த் தொண்டிலும் தலைநின்றுள்ளர். தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திற்கு இவ் வூரிலேயே அடிகோலியும், உடலியலும் உடல்நல வழியும் (Physiology and Hygiene) எனும் அறிவியல் நூலைத் தனித் தமிழில் விளங்கச் செய்தும், மொழியரசி எனும் தமிழ்ப் பெருமை கூறும் தனி நூலைத் திருவாரூரில் சிறப்புற அரங்கேற்றித் தமிழ்ப் புலவர் பலரைப் பெருமைப்படுத்தித் 'தமிழ் மணி' என்னும் பட்டத்திற்கு உரியவராகியும், தஞ்சைச் சில்லாப் பந்தயம் (Tanjore District Sports) ஆங்கில மொழி வாயிலாக நடைபெற்று வந்ததை அருந் தமிழின் அடிப்படையில் நடத்திக் காட்டியும், பலப்பல ஆக்க வேலைகள் புரிந்து வந்தது தமிழ் நாடு அறிந்ததாகும்.

அவர் ஓய்வு பெற்றும் ஓய்வு கொள்ளாது பத்தாண்டுகட்கு மேலாகப் பாடுபட்டுத் தொகுத்து வந்த மேற்கண்ட "திருக்குறள் சொல்லடைவு நூலை" அச்சிட்டுக்கொண்டு, அதன் பிற்பகுதியாகிய "திருக்குறட் பொருளடைவு" எனும பெரும் பயனளிக்க வல்ல அரிய நூலை இயற்றப் புகுந்தார். தஞ்சாவூர்ப் பெருமக்கள் ஆதரவுடன் அதுபற்றிப் பதினறு சொற்பொழிவுகள் அறிஞர்கள் தலைமையின் கீழ்த் தொடர்பாக ஆற்றித் தம ஆழ்ந்த அறிவைப் புலப்படுத்தினர். மேலும், பல வகையில் ஆய்ந்து, கலந்து, தெளிந்து அந் நூலை வெளியிட இவ்வூருக்கு வந்துளார். அச்சான முதற் பகுதியைத் திருவள்ளுவர் திருக் கோவிலில் மிகச் சிறப்பாக அரங்கேற்றி அவ்

விடத்தை உலகப் பேரறிஞர் கூடிடும் (Universal Centre of Light and Learning) ஆக்க அடிகோல வேண்டு மென்பதும் இம மாநகரி லுள்ள ஒவ்வொரு கல்லூரியிலும், திருக்குறள் சங்கங் களிலும், வேறொரு தொடர் சொற்பொழிவு (another series of lectures) ஆற்றிக் கூடியவரை எல்லாத் தமிழறிஞருடன் நெருங்கிக் கலந்து கொண்டு, அந் நூலைத் திருந்திய முறையில் வெளியிட வேண்டு மென்பதும் அவரது ஆசையாகும். அவரை ஊக்கப் படுத்தி, அவரது நற் கருத்தை நிறைவேற்ற இச் சென்னைப் பெருமக்கள், பேரறிஞர்கள் இசைந்தருளிக் கூடிய விரைவில் குறிப்பிடப்படும் நாளில் ஒன்றுகூடி ஒரு செயற் கழகத்தை அமைத்துத் திருக்குறட் பணி புரிய உதவியருளும்படி கேட்டுக் கொள்ளும்,

அன்பர்கள்.

(ஒ—ம்)

1. திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, எம். ஏ., எம். எல். ஏ., சபாநாயகர், பொது மக்கள் சட்டசபை.
2. திரு. வ. சோ. தியாகராச முதலியார், எம். ஏ., தலைவர், திருப்பதி தேவஸ்தான ஆட்சிக் குழு.
3. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி ஐயர், தலைவர், இந்திய மருத்துவக் குழு.
4. திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார், எம். எல்.சி., மேடைத் தமிழ் ஆசிரியர்.
5. திரு. கெ. கோதண்டபாணி பிள்ளை, பி. ஏ.. ஓய்வுற்ற வெளி நாட்டுக் குடியாட்சியாளர்.
6. திரு. கி. வா. ஜகந்நாதன், கலைமகள் ஆசிரியர்.
7. இ. கே. நடேச சர்மா, எம். ஏ., தமிழ்ப் பேராசிரியர், லயோலாக் கல்லூரி.
8. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், பேராசிரியர், கிறித்துவக் கல்லூரி, தாம்பரம்.
9. திரு. எஸ். கெ மகம்மது உசேன் நயினுர், எம். ஏ., எல். எல். பி., பி. எச். டி., பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.
10. திரு. அ. கி. பரந்தாமனுர், பி. ஏ., பேராசிரியர், தியாக ராயக் கல்லூரி, மதுரை.
11. திரு. ப. துரைக்கண்ணு முதலியார், எம். ஏ., எல். டி., தலைமை ஆசிரியர், சிந்தாரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி,
12. திரு. அ, முத்தையா, எம். ஏ., பேராசிரியர், பச்சை யப்பன் கல்லூரி, சென்னை.